## பொருளடக்கம்:

கைரேகை சாஸ்திரம் என்பது என்ன?

கைகளின் அமைப்பு

- ஆரம்பகாலக் கை (அ) துவக்க கால கைகள்
- சதுரக் கைகள்
- தத்துவக் கைகள்
- துடுப்புக் கைகள்
- சிற்பக் கைகள்
- கலப்புக் கைகள்
- மனோ தத்துவக் கைகள்

விரல்களின் அமைப்பில் இருந்து சில முக்கியமான குணங்கள்

- சுண்டு விரல்
- மோதிர விரல்
- நடுவிரல்
- ஆள்காட்டி விரல்
- கட்டை விரல்

கையில் உள்ள மேடு சொல்லும் ரகசியம்

- சுக்கிரன் மேடு
- குரு மேடு
- சனி மேடு
- சூரிய மேடு
- புதன் மேடு
- செவ்வாய் மேடு
- சந்திர மேடு

கையில் உள்ள ரேகை

- ஆயுள் ரேகை
- புத்தி ரேகை
- இருதய ரேகை
- விதி ரேகை
- காதல் ரேகை
- செவ்வாய் ரேகை
- சூரிய ரேகை
- வாழ்க்கை ரேகை
- **H** ரேகை
- **M** ரேகை
- மணிக்கட்டு வரிகள்

கைரேகை குறிகள்

- திருசூல ரேகை
- முக்கோண ரேகை
- இருதய ரேகையும்... குறிகளும்
- ஆயுள்ரேகையும்... குறிகளும்

(படம்-1)



# கைரேகை சாஸ்திரம்

- ஆதி காலம் முதல் இன்று வரை இந்த பிரபஞ்சம் எண்ணற்ற ரகசியங்களை தன்னகத்தே மறைத்து வைத்துள்ளது. ஒவ்வொரு ரகசியங்களையும் அறியும் பொழுது நம்மால் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை மட்டுமே செல்ல இயலுகின்றது. அதேபோல மனிதர்களின் உடலிலும் பலவிதமான எண்ணற்ற ரகசியங்கள் மறைந்திருக்கின்றன.

- அதற்கு உதாரணம் என்பது மனிதர்களின் உள்ளங்கையில் காணப்படுகின்ற குறுகலான சில கோடுகள், மனிதரின் எதிர்காலத்தையும் சொல்லக்கூடிய வலிமை உடையதாக இருக்கக்கூடியதாகும். இதை அறிந்த நம் முன்னோர்கள் அதை நெறிப்படுத்தி அதற்கு சில உதாரணங்களையும் கொடுத்து எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு சாஸ்திரத்தையும் வடிவமைத்து நமக்கு கொடுத்துள்ளார்கள். அந்த சாஸ்திரமே "கைரேகை சாஸ்திரம்"ஆகும்.

- கைரேகை சாஸ்திர உதவியின் மூலம் பிறந்த நேரம், பிறந்த தேதி தெரியாமல் இருந்தாலும் அவர்களின் எதிர்காலத்தை சிறந்ததொரு முறையில் கைரேகை அறிவதில் நுட்பத்திறன் கொண்டவர்கள் உதவியால் அறிந்து கொள்ள முடியும். கைரேகை சாஸ்திரத்திற்கு அவரவர்களின் கரங்களில் இருக்கக்கூடிய ரேகைகள் சாட்சியாக இருந்து அவர்களின் எதிர்காலத்தை எடுத்துரைக்கின்றது.

- நமது கரங்களில் இருக்கும் ரேகைகளின் அமைப்பிற்கும், ஜோதிடத்தில் இருக்கக்கூடிய கிரகங்களின் அமைப்பிற்கும் நேரடியான தொடர்புகள் இருக்கின்றன. நாடி ஜோதிடத்தில் பெருவிரல் ரேகை பற்றி நிறைய நிறைய குறிப்புகள் இருக்கின்றன.

- மனிதர்கள் எவ்வளவுதான் புதிய தொழில்நுட்பம் கொண்டு ராக்கெட் விண்கலங்கள் உருவாக்கினாலும், இறைவனின் சில விஷயங்களை அறிந்து கொள்வது என்பது எப்பொழுதும் மனிதர்களால் முடியாது. அதைப்போலத்தான் மனிதர்களுடைய எதிர்காலமும். நமது கரங்களில் இருக்கக்கூடிய ரேகைகளை கொண்டு ஓரளவு நம்மால் நம்முடைய எதிர்காலத்தை கணித்து கொள்ள முடியுமே தவிர, முழுமையாக

அறிந்து கொள்வது என்பது இறைவன் அருளும், அனுபவ அறிவும் இருக்கும்பட்சத்தில் தான் சாத்தியமாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குறிப்புகளும் கைரேகை சாஸ்திரத்தின் அடிப்படைக்குறிப்புகள் ஆகும். இந்த குறிப்புகளை கொண்டு அனுபவ ரீதியாகவும் நாம் பல ஆய்வுகள் செய்து இறைவனின் அருள் பெற்று இருப்போம். ஆனால், நாமும் பலரின் எதிர்காலத்தை பற்றி எடுத்துரைத்து அவர்களையும் நல்வழிப்படுத்த இயலும். வாருங்கள் இனி கைரேகை சாஸ்திரத்தின் அடிப்படைகளை பற்றி அறிந்துகொள்ள செல்வோம்.

## கைரேகை சாஸ்திரம் என்பது என்ன?

- ஜாதகம் என்பது ஒரு மனிதனின் பிறந்த நேரம், பிறந்த வருடம், பிறந்த மாதம், பிறந்த தேதி ஆகியவை தெரிந்தால் மட்டுமே கணிக்க முடியும். எண் கணிதம் எனப்படுவதும் ஏறக்குறைய இப்படித்தான். ஆனால், ரேகை மட்டும் இதற்கு விதிவிலக்கு. ரேகையை வைத்து ஒரு மனிதனை பற்றி ஆழமாக கணித்து விடலாம்.

- ஒருவரின் ரேகையை வைத்து ஜெனன ஜாதகத்தை அறிய முடிவது போல, ஜெனன ஜாதகத்தை வைத்து ரேகையை அறிய முடியாது. இவ்வளவு சிறப்புகளை கொண்ட கைரேகையை பற்றி தெரிந்து கொள்வோம்.

- கைரேகை சாஸ்திரம் அல்லது குறிபார்த்தல் என்பது ஒருவரின் உள்ளங்கையில் இருக்கும் கைரேகையை ஆராய்வதன் மூலமாக ஒருவரின் எதிர்காலத்தையும், குணத்தையும் சொல்லும் கலையாகும். இது கைரேகை வாசிப்பு அல்லது குறிசொல்லுதல் என்றும் அழைக்கப்படும்.

- இது உலகின் எல்லா பகுதிகளிலும் பல்வேறு கலாச்சார வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. இவ்வாறு குறிசொல்லும் பழக்கமுடையவர்கள் பொதுவாக கைரேகை ஜோதிடர்கள், கைரேகை படிப்பவர்கள் அல்லது குறிசொல்பவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.